`

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 17.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-13126/SCIC/2023**

திரு நா. சுந்தர் மேல்முறையீடுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ பொது அதிகார அமைப்பு
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக
உதவியாளர், ..
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
தாம்பரம், செங்கல்பட்டு மாவட்டம்.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் 21.05.2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.5088/2021/அ1/கடித நகல், ந.க.1207/2021/இ கடிதத்தின் நகல், ந.க.5088/2021/அ1 கடித நடவடிக்கைக்காக எந்த நாளில் எந்தெந்த அதிகாரி மற்றும் அலுவலர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்கிற தகவலும், விசாரணை கோப்பு மற்றும் அலுவலக கோப்பு நகல்கள் வழங்கவும் என்பது போன்ற தகவல்களை கோரியுள்ளார்.

2. அதன் பின்னர் தகவல்கள் வரப்பெறவில்லையென்று மனுதாரர் பிரிவு 19(1)ன் கீழ் 20.06.2023 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அதன் பின்னர் 20.07.2023 தேதியிட்டு பிரிவு 19(3)ன் கீழ் தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அம்மனு வழக்கு எண்.SA-13126/2023 ஆக பதிவு

செய்யப்பட்டு மனுதாரர் கோரும் தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு 11.08.2023 தேதியிட்ட அறிவிப்பு கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. பொதுத் தகவல் அலுவலர் 12.02.2025 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரருக்கு தகவல்கள் வழங்கி அதன் விவரத்தினை ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். அதன் பேரில் மனுதாரர் 12.03.2025 தேதியிட்டு தனது ஆட்சேபனை மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3. இந்நிலையில் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின்மீது நேரில் விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 17.06.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர்களுக்கு ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

4. இன்றைய (17.06.2025) விசாரணைக்கு மனுதாரர் நேரில் ஆஜராகியிருந்தார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு சி. ஸ்ரீதர், பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் நேரில் ஆஜராகியிருந்தார்.

5. விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் 11.12.2023 மற்றும் 12.02.2025 ஆகிய தேதிகளில் மனுதாரருக்கு தகவல்கள்/பதில் வழங்கப்பட்டதாக தெரிவித்தார். மனுதாரர் ஆணையத்திற்கு 12.03.2025 தேதியிட்டு தனது ஆட்சேபனை மனுவினை தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்தார். இன்றைய விசாரணையில் மனுதாரர் தன்னுடைய மனுவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வருவாய் கோட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பி விசாரணை மேற்கொள்ள தெரிவித்திருந்ததாகவும் அதன் பேரில் தான் விசாரணை அறிக்கை மற்றும் அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை கோரியிருந்ததாகவும் ஆனால் அவை தனக்கு வழங்கப்படவில்லையென்றும் தெரிவித்தார். மேலும் அவர் தனக்கு ஞாயிற்றுக் கிழமையில் விசாரணைக்கு ஆஜராக கடிதம் வரப்பட்டு அதன் பேரில் தான் சென்றிருந்ததாகவும் ஆனால் அலுவலகம் மூடப்பட்டிருந்தது என தெரிவித்தார்.

6. மனுதாரரின் மனுவிற்கு மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் விசாரணை அறிக்கை அவருக்கு வழங்கப்படவில்லை எனவே கீழ் கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது:

**பொதுத் தகவல் அலுவலர் மேற்குறிப்பிட்ட பொருள் தொடர்பான கோப்பினை தேடி எடுத்து அனைத்து ஆவணங்களுடன் 05.08.2025 அன்று நேரில் ஆஜராக வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. வழக்கு 05.08.2025க்கு ஒத்தி வைக்கப்படுகிறது. மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆகியோர் 05.08.2025 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராக அழைப்பாண அனுப்பப்பட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-13126/SCIC/2023</u>**

பெறுநர்
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
தாம்பரம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**
திரு நா. சுந்தர்
த/பெ. நாராயணன்
2/34, யூரோப்பியன் லேன்,
பட் ரோடு, பரங்கிமலை
சென்னை 600 016.

JJ/PS